மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

முன்னிலை: **திரு.பா.சரவணன், B.Sc., B.L.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01 ஆம் நாள் புதன் கிழமை

மேல்முறையீட்டு வழக்கு எண்.67/2025
(CNR No: TNTP01-001851-2025)

1) சவேரியார்,
த/பெ. லேட்.சின்னப்பன்,
தீராம்பட்டி,
செவலூர் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

2) செல்வராஜ்,
த/பெ. லேட்.சின்னப்பன்,
தீராம்பட்டி, செவலூர் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

3) ஆரோக்கியம்மாள்,
க/பெ.ஆசீர்,
தீராம்பட்டி, செவலூர் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

4) பிச்சைமுத்து,
த/பெ. ஆசீர்,
தீராம்பட்டி, செவலூர் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

5) குழந்தைதெரஸ்,
க/பெ.லேட். இன்னாசிமுத்து,
சிதம்பரத்தான்பட்டி,
செவலூர் கிராமம்,

மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

6) ஆரோக்கியதாஸ்,
த/பெ.லேட். இன்னாசிமுத்து,
சிதம்பரத்தான்பட்டி,
செவலூர் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

7) செபஸ்டின்,
த/பெ.லேட்.இன்னாசிமுத்து,
சிதம்பரத்தான்பட்டி,
செவலூர் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

8) அருள்தாஸ்,
த/பெ.லேட்.இன்னாசிமுத்து,
சிதம்பரத்தான்பட்டி,
செவலூர் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

9) பன்னீர்செல்வம்,
த/பெ.லேட்.இன்னாசிமுத்து,
சிதம்பரத்தான்பட்டி,
செவலூர் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

(வாதிகள் சார்பாக அவர்களது பொது அதிகாரம் பெற்ற முகவர் முத்துச்சாமி, த/பெ. வீரன்)

... மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள்

/எதிர்/

1) அருள்மிகு நல்லாண்டவர் கோவில்,
நல்லாண்டவர் தேவஸ்தானம்,
கண்ணுடையான்பட்டி கிராமம்,
மணப்பாறை, அதன் சார்பாக அதன்

செயல் அலுவலர்,
மணப்பாறை,
திருச்சிராப்பள்ளி.

2. அருள்மிகு அகஸ்தீஸ்வரர் கோவில்,
கண்ணுடையான்பட்டி கிராமம்,
மணப்பாறை,
அதன் சார்பாக,
அதன் செயல் அலுவலர்,
நல்லாண்டவர் கோவில் தேவஸ்தானம்,
மணப்பாறை, திருச்சிராப்பள்ளி.

3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில்,
குமாரவாடி கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி. அதன் சார்பாக.
அதன் செயல் அலுவலர்,
நல்லாண்டவர் தேவஸ்தானம்,
மணப்பாறை, திருச்சி.

4. தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை,
அதன் சார்பாக,
அதன் செயல் அலுவலர்,
மணப்பாறை வட்டம்,
திருச்சி மாவட்டம். ...எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகள்

மணப்பாறை, சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.229/2022–ல் 27.01.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக இம்மேல்முறையீடு.

இடையே

1) சவேரியார்,
த/பெ. லேட்.சின்னப்பன்,
தீராம்பட்டி, செவலூர் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

2) செல்வராஜ்,
த/பெ. லேட்.சின்னப்பன்,
தீராம்பட்டி, செவலூார் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

3) ஆரோக்கியம்மாள்,
க/பெ. ஆசீர்,
தீராம்பட்டி, செவலூார் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

4) பிச்சைமுத்து,
த/பெ.ஆசீர்,
தீராம்பட்டி, செவலூார் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

5) குழந்தைதெரஸ்,
க/பெ.லேட்.இன்னாசிமுத்து,
சிதம்பரத்தான்பட்டி,
செவலூார் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

6) ஆரோக்கியதாஸ்,
த/பெ.லேட்.இன்னாசிமுத்து,
சிதம்பரத்தான்பட்டி,
செவலூார் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

7) செபஸ்டின்,
த/பெ.லேட்.இன்னாசிமுத்து,
சிதம்பரத்தான்பட்டி,
செவலூார் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

8) அருள்தாஸ்,
த/பெ.லேட்.இன்னாசிமுத்து,
சிதம்பரத்தான்பட்டி,
செவலூர் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

9) பன்னீர்செல்வம்,
த/பெ.லேட்.இன்னாசிமுத்து,
சிதம்பரத்தான்பட்டி,
செவலூர் கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி மாவட்டம்.

(வாதிகள் சார்பாக அவர்களது பொது அதிகாரம் பெற்ற முகவர் முத்துச்சாமி, த/பெ. வீரன்)

... வாதிகள்

/எதிர்/

1. அருள்மிகு நல்லாண்டவர் கோவில்,
நல்லாண்டவர் தேவஸ்தானம்,
கண்ணுடையான்பட்டி கிராமம்,
மணப்பாறை,
அதன் சார்பாக,
அதன் செயல் அலுவலர்,
மணப்பாறை, திருச்சி.

2. அருள்மிகு அகஸ்தீஸ்வரர் கோவில்,
கண்ணுடையான்பட்டி கிராமம்,
மணப்பாறை,
அதன் சார்பாக,
அதன் செயல் அலுவலர்,
நல்லாண்டவர் தேவஸ்தானம்,
மணப்பாறை.

3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில்,
குமாரவாடி கிராமம்,
மணப்பாறை தாலுக்கா,
திருச்சி.

அதன் சார்பாக,
அதன் செயல் அலுவலர்,
நல்லாண்டவர் தேவஸ்தானம்,
மணப்பாறை.

4. தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை,
அதன் சார்பாக,
அதன் செயல் அலுவலர்,
மணப்பாறை வட்டம்,
திருச்சி மாவட்டம். ... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடு கடந்த 15.06.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தும், மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.பிரபாகர் அவர்களும், 1 முதல் 4 எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.ராமமூர்த்தி அவர்களும் ஆஜராகியும், மேல்முறையீட்டு குறிப்பாணை, விசாரணை நீதிமன்ற தீர்ப்பு, தீர்ப்பாணை, வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்காவணங்களையும் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதப் பிரதிவாதங்களையும் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

தீர்ப்புரை

1.1) மணப்பாறை, சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.229/2022 ல், 27.01.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கெதிராக, இம்மேல்முறையீடு அசல் வழக்கின் மேல்முறையீட்டாளர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) மேற்படி அசல் வழக்கானது, தாவாசொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரமும், அதன்தொடர்ச்சியாக, பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ அவர்களின் அதிகாரம் பெற்ற எவருமோ எக்காலத்திலும், எவ்வகையிலும், வாதிகளின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும், இடையூறு செய்யாமலிருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், மற்றும் செலவுத் தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>அசல் வழக்கின் வாதிகள் தாக்கல் செய்த வழக்குரையின் சுருக்கம்:</u>**

2.1) வாதிகள் கடந்த 12.06.2008, 16.06.2008 மற்றும் 16.06.2008 ஆகிய தேதிகளில், பதிவு செய்த அதிகார பத்திரம் மூலம், முத்துசாமி என்பவரை அதிகார முகவராக நியமித்துள்ளனர். தாவா, 1ம் அயிட்ட சொத்தானது ஏக்கர் 3.28 சென்ட் பல்வேறு சர்வே எண்களில் இருந்தாலும், ஒரே அலகாக காட்டப்பட்டுள்ளது. மற்ற இரண்டு அயிட்ட சொத்துக்களும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது. தாவாசொத்து சம்மந்தமாக வாதிகளுக்கிடையே எவ்வித சர்ச்சையும் இல்லை. 1 முதல் 9 வரையுள்ள வாதிகளின் அவரவர் சொத்துக்களில் உள்ள உரிமை, சுவாதீனம், வெவ்வேறு ஆவணங்களும், கிரைய பத்திரங்களும், பாகப்பிரிவினைகளும் அடங்கிய சான்றாவணங்கள் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) வழக்கு சொத்துக்கள் முழுவதுமாக வாதிகளுக்கு சொந்தமானது, வாதிகளுக்கிடையே எவ்வித சர்ச்சையும் இல்லாமல் பிரதிவாதிகளுக்கெதிராக அதிகார முகவர் மூலமாக வழக்கு தொடர்ந்துள்ளனர். பிரதிவாதிகளான கோவில் நிர்வாக அதிகாரிகள் வழக்குச் சொத்தில் உரிமை கோருவது கற்பனையானது. அனைத்து பிரதிவாதிகளுக்கும் எதிராக வழக்கு வாதிகள் சொத்தினை குறித்து ஒரே ஒரு வழக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் ஆவணங்களின் அடிப்படையில், ஒரு நூற்றாண்டுகளுக்கும் மேலாக தாவாசொத்தில் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதாகவும், வாதிகள் கிஸ்து மற்றும் வரிகளை அரசாங்கத்திற்கு செலுத்தி வருகின்றனர். இந்நிலையில், தற்போதைய செயல் அலுவலர் அரசாங்க பதிவுகளில் பிரதிவாதிகளின் பெயர்களில் சர்வே எண்ணை பதிவு செய்துள்ளனர். அத்தகைய சொத்துக்கள் அந்தந்த கோவில்களுக்கு சொந்தமானது என்று உரிமை கோரப்படுகிறது. அந்த வகையில் நூற்றாண்டுகளுக்கும் மேலாக வாதிகளின் உரிமையில், சுவாதீனத்திலுள்ள தாவா சொத்துக்களின் உரிமை மறுக்கப்படுகிறது.

2.3) வருவாய் ஆவணங்களில், தாவா சொத்துக்களைப் பொருத்து வாதிகளின் உரிமையும், சுவாதீனமும் மறுக்கப்பட்டிருந்தால் அது சட்டவிரோதமானதாகும். வாதிகளின் உரிமையையும், சுவாதீனத்தையும் இடையூறு செய்வதற்கு பிரதிவாதிகளுக்கு உரிமையில்லை. பிரதிவாதிகள் தங்களது செயல் அலுவலர் மூலம், தாவா சொத்துக்களில் வாதிகளின்

அமைதியான சுவாதீனத்தை இடையூறு செய்கின்றனர். எனவே, வாதிகள் தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

3) **அசல் வழக்கில், 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, மற்ற பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:**

3.1) தாவாவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறாகும். 4ம் பிரதிவாதி தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், தாவா நிலங்கள் முதலில் இனாம் நிலங்களாக இருந்தன. அவை தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் (சட்டம் 30/1963) விதிகளன் கீழ் கையகப்படுத்தப்பட்டன. நிலங்கள் தேவதாயம் கிராண்ட் என குறிப்பிடப்படும் தெய்வங்களுக்கு ஆதரவாக இனாம் மானியத்திற்கு உட்பட்டது. எனவே, தெய்வங்களுக்குச் சொந்தமான தாவா நிலங்களை அந்நியப்படுத்த யாருக்கும் அதிகாரம் இல்லை.

3.2) சட்டம் 30/1963 அறிவிப்பிற்கு பிறகு, சம்மந்தப்பட்ட அனைவருக்கும் உரிய அறிவிப்பிற்கு பிறகு, அந்தந்த கோவில்களுக்கு ரயாத்வாரி பட்டா வழங்கப்பட்டது. தமிழ்நாடு சட்டம் 30/1963ன் விதிகளின்படி, மேல்முறையீடு தாக்கல் செய்யப்படவில்லை. இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தாவா நிலங்கள் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட சட்டபூர்வ உத்தரவுகளுக்கு வாதிகள்

கட்டுப்பட்டுள்ளனர். வாதிகளும், அவர்களது முன்னோர்களும் தாவாசொத்தின் உரிமையில் இருப்பதாக கூறினாலும், அது உரிமையை அளிப்பதாகாது. தாவா சொத்துக்கள் தரிசு நிலங்களாகும். இந்து சமய மற்றும் அறநிலைய சட்டத்தின்படி, உரிமை கோருவது தடை செய்யப்பட்டுள்ளது. தாவா நிலங்கள் இனாம் நிலங்கள் என்பதை வாதிகள் மறைத்து விட்டனர். இனாம் பதிவேட்டில் தாவா நிலங்கள் கோவில்களுக்கு மானியமான நிலங்கள் என்பது தெரிய வரும். எனவே, வாதிகள் எவ்வளவு காலமானாலும், தாவா நிலத்தில், தங்களது உரிமையை கோர முடியாது. வாதிகளின் கோரிக்கை 28.04.2008 ம் தேதியன்று துணை செட்டில்மெண்ட் அலுவலரால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே, வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே, வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4. **மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த மேல்முறையீட்டிற்கான காரணங்கள்**:

4.1) மேல்முறையீட்டாளர்கள், வாதிகளாகவும், எதிர்மேல்முறையீட்டாளர் கள் பிரதிவாதிகளாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்களுக்கெதிராக வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையானது சட்டத்திற்கு முரணானது. விசாரணை நீதிமன்ற நீதிபதி மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சியத்திலுள்ள உண்மை தன்மையையும், நியாயத்தையும் கவனிக்கத் தவறிவிட்டார். விசாரணை நீதிமன்ற நீதிபதி மேல்முறையீட்டாளர்கள் தரப்பு

ஆவணங்களிலுள்ள உண்மை தன்மையை கவனிக்காமலும், சொத்திற்கும் எதிர்மேல்முறையீட்டாளருக்கும் எந்தவித உரிமையும் இல்லாதபோது, எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் எவ்வித சாட்சிய சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தாத நிலையிலும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களை மட்டுமே கருத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றம் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை செய்தது தவறாகும்.

4.2) மேல்முறையீட்டாளர்கள் தாவாசொத்தில் யாருடைய இடையூறுமின்றி பல வருடங்களாக வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.22 வரையுள்ள கிரைய ஆவணங்களின்படி, உரிமையாளர் என்ற அடிப்படையில் மேல்முறையீட்டாளர்களின் நீண்ட கால அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருக்கிறது என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில்கொள்ளாமல் வழக்கினை தள்ளுபடி செய்தது தவறானவையாகும்.

4.3) விசாரணை நீதிமன்றம், தாவா நிலங்கள் அனைத்தும் மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டு, தாவா நிலங்கள் குறித்து ஏற்பட்ட நிலவரி மற்றும் இனாம் ஒழிப்பு தீர்ப்பாய உத்தரவு ஆகியவற்றை வா.சா.ஆ.33 மற்றும் வா.சா.ஆ.34 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது தவறானவையாகும். மேல்முறையீட்டாளர்களுக்கெதிராக வழக்கை கருத்தில் கொள்ளாமல் தள்ளுபடி செய்தது தவறானவையாகும்.

4.4) தாவா சொத்துக்கள் அனைத்தும் மேல்முறையீட்டாளர்களுக்கு சொந்தம் என்பதை காண்பிக்க 1893 முதல் 1910 வரை ஏற்பட்ட கிரைய ஆவணங்களை கருத்தில்கொள்ளாமல் வழக்கை மேல்முறையீட்டாளர்களுக்கு சாதகமாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை செய்வதற்கு பதிலாக வழக்கை தள்ளுபடி செய்தது தவறானவையாகும். மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் அவர்களுக்குள் பாகப்பிரிவினையின்பேரில் ஏற்பட்ட ஒரு பகுதி சொத்துக்கு பட்டா பெற்றும், மீதமுள்ள சொத்திற்கு பட்டா பெறவில்லை என்பதற்காக அது கோவிலுக்கு பாத்தியம் என்று கூறுவது ஏற்புடையதல்ல என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது.

4.5) மேலும், தாவாசொத்து குறித்து, பட்டா பெற, செட்டில்மெண்ட் தாசில்தாரிடம் விண்ணப்பம் செய்யாவிட்டாலும், ஒரு சொத்து குறித்து உரிமையாளர் யார் என்பதை முடிவு செய்து, உத்தரவு பிறப்பிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்பதையும், அதற்கான முன் தீர்ப்புகளையும் விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறி வழக்கை தள்ளுபடி செய்தது சட்டத்திற்கும், இயற்கை நீதிக்கும் முரணானதாகும். எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் கோவில்களுக்கென்று பராமரிக்கப்படும் சர்வே சம்பந்தப்பட்ட புல வரைபடத்தை தாக்கல் செய்யாமலும், தாவா சொத்து எங்குள்ளது, எந்த தன்மையுடையது என்பது பற்றி தெரியாது என எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான பி.வா.சா.1 சொல்லியுள்ள நிலையில்,

தாவா சொத்துக்கள் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று விசாரணை நீதிமன்றம் முடிவுக்கு வந்தது தவறானவையாகும்.

4.6) எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் பட்டா ஏற்பட்டுள்ளதை விசாரணை நீதிமன்றம் தவறாக ஏற்றுக்கொண்டு, மேல்முறையீட்டாளர்கள் பெயரில் செட்டில்மெண்ட் தாசில்தார் பட்டா உத்தரவு வழங்கியுள்ளதை உரிமைமூலம் ஆகாது என்று முடிவுக்கு வந்தது வழக்கை தள்ளுபடி செய்தது தவறானவையாகும். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.10 வரையுள்ள ஆவணங்கள் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று தெரிய வருவதாக விசாரணை நீதிமன்றம் முடிவுக்கு வந்தது தவறானவையாகும்.

4.7) மேல்முறையீட்டாளர்கள் தரப்பு வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் கண்ட வாசகங்களின்படி, 11.08.1893-லிருந்தே எதிர்மேல்முறையீட்டாளர்கள் வசம் அனுபோக பாத்தியம் மேல்முறையீட்டாளர்களுக்கு உள்ளது என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்கத் தவறி வழக்கை தள்ளுபடி செய்தது தவறானவையாகும்.

4.8) விசாரணை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளரால் தாவா சொத்துக்கள் குறித்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையில், அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை எனவும், அதற்கான முறையான சான்றாவண, சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க

மேல்முறையீட்டாளர் தவறிவிட்டார் என விசாரணை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது தவறானதாகும்.

4.9) மேலும், எதிர்மேல்முறையீட்டாளர் தாவா சொத்தை எந்த காலத்திலும், மேல்முறையீட்டாளர்களுக்கோ அல்லது வேறு யாருக்குமோ குத்தகைக்கு விட்டு வசூலிக்கவில்லையென பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளபோது, தாவாசொத்து கோவிலுக்கு சொந்தமானது என விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கை தள்ளபடி செய்தது தவறானதாகும்.

4.10) விசாரணை நீதிமன்றம் வழக்கிற்கான வழக்கு மூலத்தை ஆராய்ந்தும், ஆவணங்களை பரிசீலிக்காமலும் மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சியத்திலுள்ள உண்மையை கவனிக்கத் தவறியும், மேல்முறையீட்டாளர் களுக்கெதிராக தாவாவை தள்ளுபடி செய்தது தவறானதாகும். எனவே, இந்த மேல்முறையீட்டை அனுமதித்து, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

5) <u>**விசாரணை நீதிமன்றத்தால் வனையப்பட்ட எழுவினாக்கள்:**</u>

1) வாதிகளுக்கு வழக்குரையில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

2) வாதிகளுக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

3) தாவா வழக்கு காலாவதி ஆகிவிட்டதாகக் கூறுவது சரியா?

4) இந்த வழக்கில் 4ம் பிரதிவாதி தவறாக சேர்க்கப்பட்டிருப்பதாக கூறுவது சரியா?

5) வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

6) விசாரணை நீதிமன்றத்தில், வாதிகள் தரப்பில் வாதிகளின் சார்பாக பதிவு பெற்ற அதிகார முகவர் முத்துசாமி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.34 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில், செயல் அலுவலர் புனிதா என்பவர், பி.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பி.த.சா.ஆ.1 முதல் பி.த.சா.ஆ.10 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) **இந்த மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சனைகள்**:

1) தாவாசொத்துக்கள், மேல்முறையீட்டாளர்கள்/வாதிகளுக்கு பாத்தியப் பட்டதா?

2) மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள், அசல் வழக்கின் வழக்குரையில் கோரியபடி, தாவாசொத்துக்களின் உரிமையாளர்கள் என விளம்புகை பரிகாரம் வழங்கத்தக்கதா?

3) மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் கோரியபடி, தாவாசொத்துக்களைப் பொறுத்து, நிரந்தர உறுத்துக்கட்டளை கட்டளை பரிகாரம் கிடைக்கத் தக்கதா?

4) இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

5) விசாரணை நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை மாற்றியமைக்கத்தக்கதா?

6) எதிர்மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த, கூடுதல் ஆவணத்தை ஏற்றுக்கொள்ளக் கோரிய, இ.ம.எண்.1/2026 அனுமதிக்கத்தக்கதா?

7) இதர பரிகாரங்கள் என்ன?

8) இந்த வழக்கின் மேல்முறையீட்டாளர்கள் அசல் வழக்கில் வாதிகள். எதிர் மேல்முறையீட்டாளர் அசல் வழக்கில் பிரதிவாதிகள். இந்த மேல்முறையீட்டில், விவாதிக்க வசதியாக இருக்கும் பொருட்டு, விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்களின் தகுநிலையே, இந்த மேல்முறையீட்டிலும் எடுத்தாளப்படுகிறது.

9) **<u>இருதரப்பு வாதவுரைகள்:</u>**

10) மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அசல் வழக்கின் வழக்குரையிலும், மேல்முறையீட்டில் உள்ள காரணங்களையே விவரித்துக் கூறி, மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தாவாசொத்துக்களின் உரிமையாளர்கள் என்றும், அவர்கள் தாவாசொத்துக்களை வா.சா.ஆ.2 முதல் 34 வரையான ஆவணங்களின் அடிப்படையில் பல்வேறு தேதிகளில் கிரையம் பெற்று தொடர்ந்து யாருடைய இடையூறுமின்றி அனுபவித்து வருவதாகவும்,

வாதிகளுக்கிடையே அவரவருக்கு உரிமைப்பட்ட சொத்துக்களை அனுபவிப்பதில் பிரச்சினை இல்லை என்றும், பிரதிவாதிகள் கோவில் நிர்வாகம் இந்த சொத்துக்களில் எந்த உரிமையும் இல்லாமல் கற்பனையான உரிமை கோரப்பட்டுள்ளதாகவும், மேல்முறையீட்டாளர்கள்/ வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை விசாரணை நீதிமன்றம் முறையாகப் பரிசீலிக்கவில்லையென்றும், விசாரணை நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்தது தவறு என்றும், ஒரு பகுதி சொத்துக்கு பட்டா பெறாததாலேயே அது கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று கருத முடியாது என்றும், சட்டம் 30/1963ன் பிரிவு 44-ன் கீழான அனுமானம் இந்த வழக்குச் சொத்திற்கு பொருந்தாது என்றும், பிரதிவாதிகளான திருவுருக்களை(Idol) காலவரையறையை பொறுத்து, நிரந்தரமான இளவர் என்று கருத முடியாது என்றும், எனவே, காலவரையறை சட்டம் அவர்களுக்கு பொருந்தும் என்றும், எனவே, பிரதிவாதிகளான திருவுருக்களுக்கு (Idol) இந்த சொத்துக்களைப் பொறுத்து ஏதேனும் உரிமையிருப்பினும், அது காலவரையறையால் அற்றுப்போய்விட்டது என்றும், எனவே, இந்த மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டுமென்றும் வாதிட்டார். மேலும், இதே கருத்தை விரிவாக வலியுறுத்தி, எழுத்துப்பூர்வ வாதவுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது..

11) எதிர்மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள்/கோயில் திருவுருக்கள் (Idol) தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், விசாரணை

நீதிமன்றம் வழக்கை சரியான முறையில் பரிசீலித்து, ஆவணங்களையும் முறையாக பரிசீலித்து, சரியான முறையில் தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும், அதில், குறுக்கிடுவதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லையென்றும், தாவா சொத்துக்கள் தேவதாய இனாம் நிலங்கள் என்றும், இனாம் ஒழிப்பு சட்டப்படி பட்டா வழங்கப்பட்டிருந்தாலும், உரிமையியல் நீதிமன்றம் உரிமைமூலம் தொடர்பாக பரிசீலிக்க முடியும் என்றும், இந்த வழக்கின் IFR பதிவேடுகளின்படி, பிரதிவாதி கோயிலுக்கு 30/1963 சட்டம் பிரிவு 44–ன் கீழான அனுமானம் கிடைக்கத்தக்கது என்றும், இந்து அறநிலையத்துறை சட்டம் பிரிவு 109–ன் கீழ் காலவரையறை சட்டம் கோயில் நிலங்களுக்கு பொருந்தாது என்றும், கோயில் நிலங்களுக்கு வாதிகள் எதிரிடை அனுமானம் கோர முடியாது என்றும், எனவே, இந்த மேல்முறையீட்டு வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே, இந்த மேல்முறையீட்டை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், இந்த எதிர்மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இ.ம.எண்.1/2026 ல் கண்ட TD NO.2030 தொடர்பான இனாம் பதிவேடு நகலை கூடுதல் ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் வாதிட்டார். மேலும், இதே கருத்தை விரிவாக வலியுறுத்தி எழுத்துப்பூர்வ வாதவுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12) இருதரப்பு கருத்துக்களும், வழக்காவணங்களும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

13) **<u>பிரச்சினை எண்.6:</u>**

14) எதிர்மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த, கூடுதல் ஆவணத்தை ஏற்றுக்கொள்ளக் கோரிய, இ.ம.எண்.1/2026 அனுமதிக்கத்தக்கதா? என்பது தொடர்பாக முதலில் பரிசீலிக்க வேண்டியுள்ளது. இந்த மனுவானது மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 41 விதி 27ன் கீழ் இந்த மனுவுடன் இணைக்கப்பட்ட TD 2030 தொடர்பான இனாம் பதிவேட்டின் ஜெராக்ஸ் நகலை குறியீடு செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

15) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவிலும், வழக்குரையின் போதும், இந்த வழக்கு முதலில் திருச்சிராப்பள்ளி, சார்பு நீதிமன்ற அ.வள.எண்.240/2010 ஆக நடந்தததாகவும், பின்பு மணப்பாறை, சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.229/2022 ஆக மாற்றம் செய்யப்பட்டு, அங்கு விசாரணை நடந்ததாகவும், இந்த மனுவில் கண்டுள்ள மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை என்று தற்போது தான் தெரிய வந்ததாகவும், இத்துடன் தொடர்புடைய பிற நிலங்கள் தொடர்பாக மற்றொரு வழக்கு அ.வ.எண்.158/2021 ஆக உள்ளதாகவும், மற்றொரு வழக்கில் இந்த ஆவணம் வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மேற்படி ஆவணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

16) ஆனால், எதிர்மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் இம்மனுவை தாக்கல் செய்ய உரிய காரணம் கூறப்படவில்லையென்றும், இது இந்த வழக்கை தீர்மானிக்க தேவையான ஆவணமல்ல என்றும், இருதரப்பு வாதவுரைகள் முடிந்த பிறகே, இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

17) இந்த மனுவை பரிசீலிக்கையில், TD 2030 தொடர்பான இனாம் பதிவேட்டின் ஜெராக்ஸ் நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் சான்றிட்ட நகல் மனுவுடன் இணைக்கப்படவில்லை. பொதுவாக, ஜெராக்ஸ் நகலை ஒரு உரிமையியல் வழக்கில், சார்நிலை சாட்சியமாக(Secondary Evidence) கருத முடியாது. மேலும், அசல் வழக்கானது 2010 முதல் நடைபெற்று வருவதாக கூறப்படும் நிலையில், ஏன் விசாரணை நீதிமன்றத்தில் இந்த ஆவணத்தை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை? என்பதற்கும், மனுதாரர்கள்/ எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் உரிய விளக்கம் இல்லை. விசாரணை நீதிமன்றத்தில் அவர்களது தரப்பில் பி.த.சா.ஆ.1 முதல் பி.த.சா.ஆ.10 வரையான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எனவே மனுதாரர்கள் தரப்பில் உரிய கவனத்துடன் செயல்பட்டும் தனக்கு மேற்படி ஆவணம் கிடைக்கவில்லையென்பதை நிரூபிக்கவில்லை. மேற்படி கூடுதல் ஆவணத்தை இருதரப்பு வாதவுரைகள் முடிந்து, வழக்கின் இறுதியில் 08.06.2026 அன்று கூடுதல் ஆவணமாக ஏற்றுக்கொள்ள உரிய காரணம்

கூறப்படவில்லை என்றும், எனவே, மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும் முடிவு செய்யப்படுகிறது. எனவே, இந்த மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யத்தக்கதென **பிரச்சினை எண்.6** க்கு முடிவு செய்யப்படுகிறது.

18) <u>பிரச்சினை எண்கள் 1 முதல் 5</u>:

மேற்படி ஐந்து பிரச்சனைகளிலும் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள், ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால், அவற்றுக்கு பொதுவாக விடையளிக்க வேண்டியுள்ளது. மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் தாவாசொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. வழக்காவணங்களை பரிசீலிக்கையில், பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான நிலவுடைமை குறிப்பேடு பட்டா ஆவணங்களில், பிரதிவாதிகள் திருவுருக்கள் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிகிறது.

19) மேலும், பி.வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்ட, 28.04.2008 தேதிய உதவி நிலவரித்திட்ட அலுவலர், சென்னை அவரது செயல்முறை ஆணையில், இந்த சொத்துக்களில் உள்ள செவலூர் கிராமத்தில் கண்ட புல எண்.606/7B2 ல் கண்ட 1.21.5 ஹெக்டேர் நிலங்களுக்கு ஸ்ரீநல்லாண்டவர் தேவஸ்தானத்துக்கு பட்டா தவறாக வழங்கியதாகக் கூறி, தனக்கு பட்டா வழங்க சின்னப்பன் மற்றும் சிலர் தாக்கல் செய்த மனுவில், மேற்படி கிராமம் தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவரியாக மாற்றலும்) சட்டம் 30/63 ன் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, நிலவரித்திட்டம் மேற்கொள்ளப்பட்ட கிராமம் என்றும், எனவே, இந்த கோரிக்கை

தொடர்பாக, இனாம் ஒழிப்பு நீதிமன்றத்தினை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது தெரிகிறது.

20) இதுபோன்ற சூழ்நிலையில் பின்வரும் தீர்வு முடிவுகளில் கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1) In ***Sir – La – Sri Sivaprakasa Pandara Sannadhi Avargal Vs. Smt.T.Parvathi Ammal & Ors*** *on 20.02.1996 i in C.A.No.5141 of 1993, with Contempt Petition No.103 of 1995,* ***reported in 1998-2-L.W.188 wherein the Hon'ble Supreme Court of India*** *has held as follows:*

" This Court in a recent decision in R.Manikanaicker V. E.Elumalainaicker. 1995(4) SCC 155 = 1995 – 1 -L.W.731 has clearly held that the Civil Court's jurisdiction to adjudicate title of the parties, is not barred by virtue of the parties, is not barred by virtue of the provisions of the said Act. This is a direct decision of this Court on the provisions of the Act with which we are concerned in the present case."

2) In ***Srinivasan Vs. S Madhyarjuneswaraswami, Pattavaithalai,, Tiruchirappalli district rep. by its Executive Officer & Ors*** *on 30.04.1988, in S.A.No.51088 and 1389 of 1980,* ***reported in 1998-2-L.W.189 wherein the Full Bench of Hon'ble Madras High Court*** *has held as follows:*

"We answer the question referred to the Full Bench in the negative, by holding that the jurisdiction of the civil court to entertain a suit for declaration of title and injunction is not barred, by reason of the grant of patta under the provisions of Tamil Nadu Act 30 of 1963."

21) மேற்படி தீர்வு முடிவுகளிலிருந்து, செட்டில்மெண்ட் தாசில்தாரின் உத்தரவு, ரயத்துவாரி பட்டாவை வழங்குவது அல்லது மறுப்பது என்ற நோக்கத்திற்காக மட்டுமே மறைமுகமாக வழங்கப்படும், ஒரு துணை முடிவாகவே இருக்கும் என்பதும், அவர் தனக்கு முன் வைக்கப்படும் ஆதாரங்களின் அடிப்படையில், பட்டாவை வழங்குவது அல்லது மறுப்பது மட்டுமே அவரது அதிகார வரம்பிற்கும் உட்பட்டது என்பதும், ஆனால், ரயத்துவாரி பட்டா மறுக்கப்பட்ட பின்னரும் கூட, நிலத்தின் உண்மையான தன்மை கேள்விக்குள்ளாக்கப்படும் பட்சத்தில், உரிமையியல் நீதிமன்றம் அது குறித்து பரிசீலித்து தரப்பினர்களின் உரிமை தொடர்பாக விளம்புகை செய்ய உரிமையுள்ளது என்பது தெரிகிறது. எனவே, மேற்படி தீர்வு முடிவுகளின்படி, சட்டம் 30/63ன் கீழ் செட்டில்மெண்ட் தாசில்தார் ஏதேனும் உத்தரவு பிறப்பித்திருந்தாலும், தாவாசொத்தில் வாதிகள் தங்களது உரிமையை விளம்புகை பரிகாரம் கோரிய, இந்த வழக்கை தீர்மானிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளதென முடிவு செய்யப்படுகிறது. எனவே, இதுதொடர்பான விசாரணை நீதிமன்றத்தின் முடிவு சரியானதே என முடிவு செய்யப்படுகிறது.

22) மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில், பிரதிவாதிகளின் கோரிக்கை காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.22 வரையிலான கிரைய ஆவணங்களின் அடிப்படையில், இந்த

சொத்துக்கள் வாதிகளால் உரிமையாளர் என்ற அடிப்படையில் நீண்ட காலமாக அனுபவித்து வருவதாகவும், அதை விசாரணை நீதிமன்றம் முறையாக பரிசீலிக்கவில்லையென்றும் கூறப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பரிசீலிக்கையில், வா.சா.ஆ.2 மூக்கன்சவரிமுத்து என்பவருக்கு மீனாட்சியம்மாள் என்பவர் எழுதிக்கொடுத்த பதிவு செய்த கிரையப்பத்திரத்தில் பின்வருமாறு வாசகம் உள்ளது.

"குமாரவாடி தேவஸ்தான மானியமாகவும், சர்க்காரதில் விடப்பட்டு நான் அனுபவித்து வருகிற வயங்கள் இருவர் பெயராலும் பட்டா ஏற்பட்டு நான் அனுபவித்து வருகிற நிலம் என்றும், தேவஸ்தானம் மானேஜர் அவர்களிடம் நான் ருசி நாமா கொடுத்து தன் பெயரில் பட்டா வழங்கும்படி செய்து வைப்பேனாகவும் பூர்வீக அனுபவம் என்னுடயது தற்கால அனுபவம் தன்னுடையது"

23) எனவே, மேற்படி ஆவணத்தில் கிரையம் கொடுத்த நபருக்கு தனிப்பட்ட உரிமையிருப்பதாகக் கூறவில்லை. மாறாக, வா.சா.ஆ.2 லிருந்து அது கோயிலுக்கு சம்மந்தப்பட்ட நிலம் எனும் நிலையில்தான் வாசகம் உள்ளது.

24) மேலும், வா.சா.1 ஆக சாட்சியமளித்த வாதிகளின் அதிகார முகவராகிய முத்துசாமி தனது குறுக்கு விசாரணையில், உதவி நிலவரித்திட்ட அலுவலரிடம் கோயில் பெயருக்கு பட்டா கொடுத்ததை ஆட்சேபித்து தான் மனு கொடுத்ததில் அவர்கள் விசாரணை செய்து 28.04.2008 தேதியில் பிறப்பித்த உத்தரவில் இனாம் ஒழிப்பு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்துகொள்ள உத்தரவு

பிறப்பித்தார்கள் என்றால் சரிதான் என்றும், அதன்பேரில் தான் இனாம் ஒழிப்பு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யவில்லையென்றும் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், தற்சமயம் தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிகளின் பெயரில் பட்டா எதுவுமில்லையென்றும், தாவாசொத்துக்களைப் பொறுத்த பட்டா பிரதிவாதிகள் திருக்கோயில் பெயரில் தான் உள்ளது என்றும், அந்த விவரம் 2000 ஆண்டு கிஸ்து செலுத்த போனபோது தெரிய வந்தது என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களிலும், கோயில் நிர்வாகிகள் யாரும் தரப்பினராக இல்லை என்பதும் தெளிவாகிறது.

25) வாதிகள் நீண்ட நெடுங்காலமாக இந்த சொத்தின் சுவாதீனத்தில் உள்ளதாகவும், பிரதிவாதிகள்/திருவுருக்களின் கோரிக்கை காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, வாதிகளின் வழக்கை அனுமதிக்க வேண்டுமென்று ஒரு வாதம் மேற்கொள்ளப்பட்டது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சட்டம் பிரிவு 109–ன் படி, பிரதிவாதிகள்/ திருவுருக்கள் மேற்படி சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்ட Religious Institution என்பதால், மேற்படி *H.R. & C.E.Act* சட்டப்பிரிவு 109–ன் படி, அவர்களது கோரிக்கை தாவாசொத்தைப்பொறுத்து காலவரையறையால் பாதிக்கப்படவில்லையென்றும், எனவே, சட்டப்பிரிவு 109–ன் படி, பிரதிவாதிகளுக்கெதிராக, வாதிகள் எதிரிடை அனுபவபாத்திய உரிமை கோர முடியாது என்று முடிவு செய்யப்படுகிறது.

26) மேலும், பி.வா.சா.ஆ.1 முதல் 10 வரையான ஆவணங்களிலிருந்து, பிரதிவாதி திருவுருக்களுக்கு, 30/1963 சட்டம் பிரிவு 44–ன் கீழான அனுமானம் கிடைக்கத்தக்கது என்பதால், தாவா 1ம் அயிட்ட சொத்திலுள்ள சர்வே எண்.606/4, 0.12–1/2 செண்ட் T.S.No.21/23 தவிர, தாவாவில் குறிப்பிட்டிருக்கும் மற்ற தாவா சொத்துக்களின் சர்வே எண்களுக்கு அருள்மிகு அகஸ்தீஸ்வரர் சுவாமி கோவில் பெயரிலும், அருள்மிகு நல்லாண்டவர் கோவில் பெயரிலும், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் பெயரிலும் பட்டா வழங்கப்பட்டுள்ளதால் இந்த சொத்துக்கள், மேற்சொன்ன கோவில் திருவுருக்களுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று விசாரணை நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. சரியானதே என தீர்மானிக்கப்படுகிறது.

27) மேலும், விசாரணை நீதிமன்றம் வா.சா.1 தனது சாட்சியத்தில், வாதிகள் படிப்பறிவு இல்லாததால் தங்களது பெயரில் பட்டா ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றும், இந்த சொத்துக்களுக்கான பட்டா, பிரதிவாதிகளின் பெயரில் தான் உள்ளது என்று ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார் என்றும், எனவே, தாவாசொத்தைப் பொறுத்த உரிமையும், பாத்தியதையும், வாதிகள் நிரூபிக்கவில்லையென்றும் முடிவு செய்து, மேல்முறையீட்டாளர்கள்/ வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்துள்ளது. தாவாசொத்துக்களைப் பொறுத்து, விளம்புகை பரிகாரம் கோரிய வாதிகளே, அவர்களது வழக்கை முறையாக நிரூபிக்க வேண்டும். பிரதிவாதிகளின் வழக்கிலுள்ள சில குறைபாட்டை

அடிப்படையாகக் கொண்டு, வாதிகளின் வழக்கு நிரூபிக்கப்பட்டதாகக் கருத முடியாது. எனவே, விசாரணை நீதிமன்றம், இருதரப்பிலும் முன்னிட்ட வாய்மொழி மற்றும் ஆவண சாட்சிகளை முறையாக பரிசீலித்து, மேல்முறையீட்டாளர்/வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்தது சரியானதே என்றும், அதில் குறிக்கிடுவதற்கு ஏற்கத்தக்க காரணங்கள் இல்லையென்றும், எனவே, இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யத்தக்கதே என்றும், **பிரச்சினை எண்கள் 1 முதல் 5**–க்கு முடிவு செய்யப்படுகிறது.

28) பிரச்சினை எண். 7:

இந்த வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை கருதி, இந்த மேல்முறையீட்டு வழக்கின் தரப்பினர்கள், அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென **பிரச்சினை எண்.7**–க்கு முடிவு செய்யப்படுகிறது.

29) முடிவாக,

1) எதிர்மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த, கூடுதல் ஆவணத்தை ஏற்றுக்கொள்ளக் கோரிய, இ.ம.எண்.1/2026 செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.

2) இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு, விசாரணை நீதிமன்றம் அ.வ.எண்.229/2022 ல் 27.01.2025 அன்று பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்படுகிறது.

3) இந்த மேல்முறையீட்டு வழக்கின் தரப்பினர்கள், அவரவர் செலவுத்தொகையை, அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென முடிவு செய்யப்படுகிறது.

இத்தீர்ப்பானது, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.07.01 14:04:23 +0530

மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

நகல்:
சார்பு நீதிமன்றம், மணப்பாறை.